# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,086 — 1960 මාර්තු 17 වැනි බ්‍රහස්පතින්ද — 17.3.1960

12,086 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]

## அரசாங்க அறிவித்தல்கள்

ம.தே.க. இலக்கம் C 214/55.

### இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்) அரசப் பேரவைக் கட்டளை, 1946

1946 ம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்) அரசப் பேரவைக் கட்டளையின் 25 (1) ம் பிரிவால் என்மீது பொறுப்பிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, மகா தேசாதிபதியாகிய, ஒலிவர் எணஸ்ற் குணதிலக்க ஆகிய நான், இத்துடனிருக்கும் அட்டவணையின் 2 ம் நிரலில் குறிப்பிடப்பட்டிருப்பவரை அதற்கெதிரே அட்டவணையின் 1 ம் நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தேர்தற்றொகுதிகளின் தெரிவத்தாட்சி உத்தியோகத்தருக்கு 1960 ம் ஆண்டின் பொதுத் தேர்தல் சம்பந்தமாக அத்தகைய தெரிவத்தாட்சி உத்தியோகத்தரின் கடமைகளில் உதவிசெய்ய இவ்வறிவித்தலின் மூலம் நியமிக்கிறேன்.

கொழும்பு,
1960 ம் ஸ்ரீ மார்ச்சு மீ 17 ந் உ.

ஓ. ஈ. குணதிலக்க,
மகா தேசாதிபதி.

அட்டவணை

| I ம் நிரல் — தேர்தற்றொகுதிகள் | II ம் நிரல் — உதவித் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் |
|---|---|
| இல. 74—ஊர்காவற்றுறை<br>இல. 75—வட்டுக்கோட்டை<br>இல. 76—காங்கேசந்துறை<br>இல. 77—உடுவில்<br>இல. 78—யாழ்ப்பாணம்<br>இல. 79—நல்லூர்<br>இல. 80—கோப்பாய்<br>இல. 81—உடுப்பிட்டி<br>இல. 82—பருத்தித்துறை<br>இல. 83—சாவகச்சேரி<br>இல. 84—கிளிநொச்சி | டாக்டர் கே. சிவஞானரெத்னம், சௌக்கிய சேவைகளின் பிரதி அத்தியட்சர், யாழ்ப்பாணம். |